# வாழ்வியற் பிரதேசங்களில் காட்டு யானைகளின் ஊடுருவலால் ஏற்படுத்தப்படுகின்ற சமூக பொருளாதாரப் பாதிப்புக்கள்: இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவினை மையப்படுத்திய ஆய்வு.

# The Negative Socio- Economic Impacts caused by the penetration of wild elephants into livelihood: A Study based on the Irakkamam Divisional Secretariat Area.

**M.C. Banazir Jahan**
South Eastern University of Sri Lanka
banazir1912@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

உயிர்ப்பல்லினத் தன்மை (Biodiversity) எனும் கருத்தாடல் பல்வேறு துறைகளில் பிரயோகிக்கப்பட்டு வருவதோடு அது தொடர்பிலான ஆய்வுகளில் வளர்முக நாடுகளின் பங்களிப்பு அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாக உள்ளது. உயிர்ப் பல்லினத் தன்மை ஒரு நாட்டின் கலாசாரத்தின் வெளிப்பாடாக இருப்பதோடு அது சூழலிற்கும் மனித, சமூக, மத, கலாசார, பொருளாதார, அரசியல் துறைகளில் முக்கிய பங்கினை வகித்து வருகின்றது. எடுத்துக்காட்டாக இலங்கையில் மிருகங்களின் எண்ணற்ற வனப்பு இதனைக் காட்டுகின்றது. எனினும் காலத்தின் வேகத்தில் மானிட ஆக்கிரமிப்பினாலும் ஏனைய நடவடிக்கைகளினாலும் இலங்கைக் காடுகளில் மிருகங்களின் இருப்பிற்கு பாரிய அச்சுறுத்தலாகக் காணப்பட இன்னும் சில பகுதிகளில் காணப்படும் வன விலங்குகள் மானிட சமுதாயத்தின் இருப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. இலங்கையின் பல பிரதேசங்களில் வனவிலங்குகளின் அச்சுறுத்தல் இடம் பெற்று வருகின்றன. குறிப்பாக இலங்கையில் முக்கியத்துவமளிக்கப்படும் மிருகங்களான சிறுத்தை,யானை போன்ற விலங்குகளினாலே அதிகப் பாதிப்புக்கள் இடம் பெறுகின்றன. கலாசார முக்கியத்துவம் பெற்ற மிருகங்களினால் மனித சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலிலிருந்து உயிர்ப்பல்வகைமை என்ற அடிப்படையில் இரு சமூகத்தின் நிலைப்பினைப் பாதுகாக்க வேண்டிய தேவையின் மத்தியில் மானிட சமூகத்திற்கு பாரிய சமூகப் பொருளாதாரப் பாதிப்பினைத் தோற்றுவித்துள்ளது. இதற்கமைய இறக்காம பிரதேச செயலகப் பிரிவினை ஆய்வுப் பிரதேசதமாகக் கொண்டு இங்கு காட்டு யானைகளின் ஊடுருவலினால் ஏற்படுத்தப்படுகின்ற சமூகப் பொருளாதாரத் தாக்கத்தினைக் கண்டறிவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனை மேற்கொண்டு செயற்படுவதற்கு இவற்றினால் ஏற்படும் பாதிப்புக்களினை அடையாளம் காணுவதினையும் இதற்காக அரசினால் மேற்கொள்ளப்படும் நஷ்டஈடு மற்றும் முன்வைக்கப்பட்டிருக்கும் தீர்வின் பொருத்தப்பாட்டினையும் மதிப்பீடு செய்வதனூடாக மேலும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்கு முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு அளவு சார் மற்றும் பண்பு சார் பகுப்பாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் கணினித் தொழிநுட்பமும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலமாகஉயிரிழப்புக்கள் ஏற்படுத்தப்படல், உடலியல் ரீதியான காயங்கள் ஏற்படுத்தப்படல், குடும்பப் பின்னடைவுகள், பயிர் சேதம் ஏற்படுத்தப்படல், சமூகப் பின்னடைவுகள் ஏற்படுத்தப்படுதல், மரங்கள் அழிக்கப்படுதல் போன்ற சமூகப் பொருளாதாரப் பாதிப்புக்கள் இனங்காணப்பட்டுள்ளன. அத்தோடு இவ்வாய்வின் மூலம்காட்டு யானைகளின் ஊடுருவலால் ஏற்படுத்தப்படுகின்ற சமூக பொருளாதாரப் பாதிப்புக்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான ஆலோசனைகளும் வன விலங்குகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

***Keywords**: Bio Diversity, Wild Elephants, Livelihood, Compensation*

## அறிமுகம்

இன்றைய வளர்முக நாடுகளின் உயிர்பல்லினத் தன்மை எனும் சொல்லானது ஆய்வுகளில் அதிகம் பிரயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. உயிர்ப் பல்வகைமை என்பது பூமியில் நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய கணக்கிலடங்காத

உயிரினங்களில் காணப்படும் வேறுபாடு ஆகும். இன்றைய சூழ்நிலையில் பல மில்லியன் உயிரினங்கள் இப்புவியில் பல வடிவங்களிலும் பல அளவுகளிலும் வாழ்கின்றன. உயிர் பல்வகைமை என்பது நிலம், கடல், ஏனைய நீரியற் சூழல்கள் , சூழலியற் தொகுதிகள் உட்பட்ட எல்லா இடங்களையும் சார்ந்த உயிரனங்களின் மத்தியிலான பல்வகைமை ஆகும். இது உயிர் பல்வகைகளுக்குள்ளும் அவற்றுக்கு இடையிலும், சூழலியல் முறைமை சார்ந்தும் உள்ள பல்வகைமையை உள்ளடக்குகின்றது (UN Report, 2015). இவ் உயிரினங்கள் மனித வாழ்க்கையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல வகையிலும் தொடர்புடையவையாகவும் உதவி புரிபவையாகவும் காணப்படுகின்றன. குறிப்பாக இதில் வன விலங்குளின் பங்களிப்பு முக்கியத்துவமுடையதாகக் காணப்படுகின்றது. எடுத்துக் காட்டாக புலிகளின் எண்ணிக்கை சீராக இருக்கும் போதுதான் வனத்தின் இயல்பு நிலை பாதுகாக்கப்படுகின்றது. எனவே அவற்றினைக் கருத்திற் கொண்டே ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 4ம் திகதி உலக விலங்குகள் தினம் கொண்டாடப்படுகின்றது. இன்று இலங்கையிலும் பாதுகாக்கப்பட்டு வருவதோடு இலங்கை போன்ற நாடுகளில் வன வாழ் உயிரினங்களான புலி, கரடி, நரி, வரிக்குதிரை, சிறுத்தை, யானை, மான், சிங்கம், பன்றி போன்ற மிருகங்களுக்கு அதிக முக்கியத்துவமும் அளிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இலங்கையினைப் பொறுத்த வரையில் யானைகள் இலங்கையின் கலாசாரத்தில் முக்கிய பங்கினை வகிப்பதனால் இவை பெரிதும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் யானைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற இலக்குடன் உள்நிலைக் காப்பகமாக பல பகுதிகளில் யானைகள் சரணாலயம், வன விலங்கு பாதுகாப்புத் துறையினரால் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருவதோடு இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள காடுகளிலும் இவை பாதுகாக்கப்படுகின்றன. எனினும் காட்டு உயிரினங்களின் பாதுகாப்புக் கருதி அவை அமைக்கப்பட்டாலும் தற்போது இவற்றினால் சூழலில் காணப்படுகின்ற மானிட சமுதாயத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்தி இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்புக்களினை ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன.

**ஆய்வுப் பிரச்சினை**

இறக்காம மக்களின் பிரதான வாழ்வாதாரத் தொழிலாகவும் பொருளாதாரத்தினைத் தீர்மானிக்கும் தொழிலாகவும் வேளாண்மை காணப்படுகின்றது. இத்தொழிலினை மேற் கொள்ளும் இக்கிராம மக்கள் எதிர் நோக்குகின்ற பாரியதொரு பிரச்சினையாக பயிர் செய்கை நிலங்களில் காட்டு யானைகளின் ஊடுருவல் நோக்கப்படுகின்றது. இப்பிரச்சினையானது இம்மக்களின் சமூகப் பொருளாதார நிலையில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. எனவே, இவ்வாய்வானது வாழ்வியற் பிரதேசங்களில் காட்டு யானைகளின் ஊடுருவலால் மக்களின் வாழ்வில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமூக பொருளாதார ரீதியிலான பாதிப்புக்களைக் கண்டறிவதனையே இவ்வாய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

வாழ்வியற் பிரதேசங்களில் காட்டு யானைகளின் ஊடுருவலால் ஏற்படுத்தப்டுகின்ற சமூகப் பொருளாதார பாதிப்புக்கள்: இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவினை மையப்படுத்திய இவ்வாய்வானது, வாழ்வியற் பிரதேசங்களில் காட்டு யானைகளின் ஊடுருவலால் கிராம மக்கள் எதிர் நேர்க்குகின்ற சமூக, பொருளாதாரப் பாதிப்புக்களினை அடையாளப்படுத்துவதினை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

இது ஒரு சமூகவியல் ஆய்வு என்ற வகையில் இங்கு பண்புசார் (Qualitative Research Method) முறை பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்விற்காக முதலாம் நிலைத் தரவுகள் (Primary data), இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary data) ஆகிய மூலங்களிலிருந்து தரவுகள் பெறப்பட்டன.

இவ்வாய்வானது முதலாம் நிலைத் தரவிற்காக இறக்காம பிரதேச செயலகக் பிரிவினை அடிப்படையாகக் கொண்ட அவதானம், நேர்காணல் மற்றும் இலக்குக் குழு கலந்துரையாடல் என்பவற்றின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதான தகவலாளிகளான (Key informants) பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து நேர்காணல் (Interview) மூலமும் சமூக சேவை உத்தியோகத்தர்கள், கமநல சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்றவர்களிடம் கலந்துரையாடல்கள் (Discussion) மூலமும் தரவுகள் பெறப்பட்டன.
இரண்டாம் நிலைத் தரவு மூலங்களாக இறக்காம பிரதேச செயலக அறிக்கை, வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அறிக்கை, புள்ளிவிபரத் திரட்டுக்கள், புத்தகங்கள், இதழ்கள், கட்டுரைகள், இணையத் தகவல்கள் மற்றும் வெளியீடுகள் என்பவற்றிலிருந்து தரவுகள் பெறப்பட்டன.

**பகுப்பாய்வும் முடிவுரையும்**

இறக்காமப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாக இன்று காட்டு யானைகளின் ஊடுருவல் அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கு பெறப்பட்ட தரவுகளினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட விவரணப் பகுப்பாய்வின் மூலம் இக்கிராம மக்கள் எதிர் நோக்கும் சமூகப் பொருளாதாரப் பாதிப்புக்களினை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

- **சமூகப் பாதிப்புக்கள்**

1. உயிரிழப்புக்கள் ஏற்படுத்தப்படல் : மிருகங்கள் மக்களுக்கு பல்வேறு வகையான பாதிப்புக்களினை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றன. இதிலும் யானைகள் எனும் போது அவை மக்களுக்கு உயிரிழப்புக்களை ஏற்படுத்துவதாக உள்ளன. யானைகளின் பலத்தினை எதிர்க்குமளவிற்கு மனிதன் பலம் படைத்தவனல்ல என்பது இயற்கை. பதிவுகளின் அடிப்படையில் இக்கிராமத்தில் 2012- 2016 வரையான காலப்பகுதியில் 3 மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

2. உடலியல் ரீதியான காயங்கள் ஏற்படுத்தப்படல் : இக்கிராமத்தில் காட்டு யானைகளின் தாக்குதல்களினால் பலர் பலத்த காயங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அதாவது பதிவுகளின்படி 2013 க்குப் பின்னரான காலப்பகுதியில் ஒரு பாடசாலை மாணவர் உட்பட 2 காய சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

3. குடும்பப் பின்னடைவுகள் ஏற்படுத்தப்படுகின்றன. : அதிகமான உயிரிழப்புக்களை ஏற்படுத்துவதனால் குடும்ப பின்னடைவுகளுக்கு இட்டுச் செல்கின்றன. பொருளாதாரத்தின தீர்மானிக்கும் சக்தியானது குடும்பத் தலைவன் என்ற வகையில் இவரின் உயிரிழப்பு குடும்பப் பின்னடைவக்கு காரணமாக அமைகின்றது.

4. உளவியல் ரீதியான பாதிப்புக்கள்: யானைகளின் திடீர் வரவினால் காண்பவர்கள் உளவியல் ரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இப்பகுதியில் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் இந்நிலையிலிருந்து மீள

முடியாத தன்மையில் காணப்படுகின்றனர். மேலும் உளப்பயமும் இதனால் ஏற்படுத்தப்படுகின்றது.

5. வெளியில் செல்வதற்காக அச்சப்படும் நிலை : காட்டு யானைகளின் வரவினால் அவர்கள் வெளியில் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. உதாரணமாக மாணவர்களை எடுத்து நோக்கும் போது இவர்களும் இதனால் பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுவதனால் பாடசாலைக்குச் செல்வதற்கும் வெளி இடங்களில் தங்களது தேவைகளை நிறைவேற்றச் செல்வதற்கும் அச்சப்படுகின்றனர்.

6. கலாச்சாரத் தாக்கம். : இறக்காப் பிரதேசம் மூவின மக்களையும் இணைத்து வாழ்கின்ற பிரதேசமாகையால் குடும்பத் தலைவன் இல்லாததொரு நிலையில் பிள்ளைகள் மத்தியில் கலாச்சாரச் சீரழிவுகளுக்கு இட்டுச் செல்கின்றதொரு நிலை காணப்படுகின்றது.

7. சமூகப் பின்னடைவுகள் ஏற்படுத்தப்படுகின்றன : சமூகமானது சீராக இயக்கம் பெற சமூகத்தில் காணப்படுகின்ற அனைத்து விடயங்களும் சீராக இயங்க வேண்டும். அவற்றில் பொருளாதாரப் பின்னடைவுகள், கலாச்சாரச் சீரழிவுகள் இடம் பெறுமிடத்து சமூகம் இயற்கையாகவே பின்னடைவினை சந்திக்கின்றது.

- **பொருளாதாரப் பாதிப்புக்கள்**

1. பயிர் சேதம் ஏற்படுத்தப்படல் : இக்கிராமமானது முழுமையாக விவசாயத்தின் அடிப்படையில் அமைந்துள்ளமையால் இக்காட்டு யானைகள் அதிகமாக அறுவடைக்காலம் தொடங்கியதிலிருந்து அதிகமாக பயிர் நிலங்களுக்கு வருகை தருகின்றன. இதனால் இம்மக்களின் பயிர் செய்கைகளில் பாரியளவு அழிவுகள் ஏற்படுத்தப்படுகின்றது.

2. பொருளாதார நிலை பாதிக்கப்படுகின்றது. : இக்கிராம மக்களின் அடிப்படைப் பொருளாதாரமாக காணப்படுவது விவசாயமாகும். விவசாய நிலங்களில் இவை அழிவுகளினை ஏற்படுத்துவதினால் இம்மக்களின் பொருளாதாரம் பாதிக்கப்படுகின்றது. இதனால் இம்மக்கள் பொருளாதாரத்தில் பின்னடைவுகளை எதிர் நோக்ககுின்றனர். 2008-2012 பதிவுகளின் படி 4 பயிர் சேதங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

3. வீட்டுச் சேதம் : யானைகளின் வருகை அதிகமாக அறுவடைக்காலம்/அதற்குப் பின்னராக் காணப்படுவதனால் இம்மக்கள் வீட்டினுள் நெல் களஞ்சியப்படுத்தி வைக்கும் போது இவை அவற்றினைத் தேடி வருகின்றமையால் மக்களின் வீடுகளுக்கும் சேதத்தினை ஏற்படுத்துகின்றன.

4. மரங்கள் அழிக்கப்படுகின்றன. : யானைகள் அதிகமாக பயிர் சேதத்தினை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாது மரங்களையும் அழிக்கின்றன. அதாவது வாழ்வாதார மரங்களான தென்னை, மா போன்ற மரங்களையும் காட்டினுள் காணப்படுகின்ற மரங்களையும் அழிக்கின்றன.

**முடிவுரை**

மனிதர்கள் மிருகங்களுடனான போராட்டத்தில் பாரியளவிலான பாதிப்புக்களை எதிர் நோக்கி வருகின்றனர். இவற்றுக்கான தீர்வுகள் எனும் பெயரில் வன

ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினூடாக பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும் அவை மக்களுக்கு பயனளிப்பதாக இருக்கவில்லை. உயிரிழந்த குடும்பங்களுக்கு 100,000 நஷ்டஈட்டுத் தொகையும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பாதிக்கப்பட்ட பயிர் செய்கை நிலங்கள் மற்றும் வீட்டு சேதம் என்பவற்றைப் பொறுத்து நஷ்டஈடு வழங்கப்படுகின்றன. எனினும் இவற்றை இதற்கான ஒரு தீர்வாகக் கூற முடியாது. இது மக்கள் அவற்றிற்கு எதிரான செயற்பாட்டில் ஈடுபடாது தடுக்கக்கூடிய நடவடிக்கையாகவும் சமாதானப்படுத்தும் செயற்பாடாகவுமே நோக்கலாம். எனினும் இந்நடவடிக்கைகள் முறையாக இடம் பெறாது இருக்கின்றமையால் இம்மக்கள் இதற்கான நஷ்ட ஈட்டுத் தொகையினைப் பெற்றுக் கொள்ள அக்கறை காட்டுவதில் பின்தங்கி காணப்படுகின்றனர். பகுப்பாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப்பகுதிகளில் அதிகமான பாதிப்புக்கள் நிகழ்ந்துள்ளன. இதில் பதிவு செய்யப்பட்ட உயிரிழப்புக்கள் மற்றும் சேதங்களை விட பதிவு செய்யப்படாத உயிரிழப்புக்கள், சேதங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. எனவே, மக்கள் அதற்கான நஷ்டஈட்டினை விட முழுமையான தீர்வினையே இப்பிரச்சினைக்காக வேண்டி நிற்கின்றனர்.

இப்பிரச்சினைக்காக முன்வைக்கப்படக்கூடிய ஆலோசனைகளாகவும் தீர்வுகளாகவும் காட்டு யானைகளை உரிய வனங்களுக்கு அப்புறப்படுத்துதல், பயிர் நிலங்களைச் சுற்றி மின் வேலிகள் அமைத்தல், வீடுகளில் நெற்களஞ்சியப்படுத்துவதனைக் குறைத்தல், இது தொடர்பான அறிவூட்டற் கருத்தரங்குகளை நடாத்துதல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய கால எல்லைக்குள் நஷ்டஈடுத் தொகையினை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இப்பிரச்சினைக்கான குறிப்பிடத்தக்க வெற்றியினைக் காண முடியும்.

**உசாத்துணைகள்**

nwf.org/wildlife/wildlife-Conservation/biodiversity.aspx
www.biodiversitya-z.org/content/biodiversity
www.dwc.gov.lk/index.php/en/
www.jaffnamuslim.com/2013/10/blog-post-4.html?m=1